

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | பிப்ரவரி 25, 2021 | புரட்சி 20 | முழக்கம் 7 | விலை: ரூ.3.00


## மோடி ஆட்சி கோல்வாக்கர் தத்துவத்தைக் கொண்டாடுகிறது

மோடி ஆட்சியின் கலாச்சாரத் துறை அமைச்சகம், ஆர்.எஸ்.எஸ். 'தத்துவத் தந்தை'யான எம்.எஸ். கோல்வாக்கரின் பிறந்த நாளில் அதிகாரப் பூர்வமாக டிவிட்டர் பதிவு ஒன்றை வெளியிட்டிருக்கிறது. "கோல்வாக்கர் மிகப் பெரும் சிந்தனையாளர்; அறிவு ஜீவி; வரலாற்றில் இடம் பிடித்த மாபெரும் தலைவர்; அவரது சிந்தனைகள் நமக்கு என்றென்றும் ஊக்கம் தரும். நமது அடுத்தடுத்த தலைமுறைக்கு வழிகாட்டி நிற்கும்" என்று கோல்வாக்கர் படத்துடன் அந்தப் பதிவு வெளியிடப் பட்டுள்ளது.

காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சஷிதரூர் உள்ளிட்ட பலரும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். இதற்கு கலாச்சாரத் துறை அமைச்சரின் பத்திரிகை தொடர்பாளரான நிதின் திரிபாதி என்ற அதிகாரி பதிலளித்துள்ளார்.

"இந்தியா பல்வேறு கலாச்சாரம் - தத்துவங்களைக் கொண்ட நாடு. எந்தத் தத்துவத்தையும் பேசக் கூடாது என்று ஒதுக்கி வைக்கவோ மவுனிக்கச் செய்யவோ நாங்கள் விரும்பவில்லை" என்று பதில் கூறியிருக்கிறார். இந்தியாவில் பெரியார் தத்துவங்கள் - மார்க்சிய தத்துவங்கள் - மாவோயிச தத்துவங்களை ஏற்றுக் கொண்டவர்கள் இருக்கிறார்கள். அந்தத் தத்துவங்களையும், கலாச்சாரத் துறை 'மவுனமாக்காமல்' ஒதுக்கி வைக்காமல் செயல்படுமா?

கோல்வாக்கர் என்ன தத்துவங்களை முன் வைத்தார்? அவரது 'பஞ்ச் ஆப் தாட்ஸ்' நூலில் என்ன தத்துவங்களை வலியுறுத்தினார்? அனைத்தும் சட்ட விரோதமானவை.

- இந்தியா என்பது ஆரியர்களுக்கான நாடு.
- இந்தியாவின் தேசிய மொழி சமஸ்கிருதம் மட்டுமே.



- ஜாதி அமைப்பு முறையாலோ வர்ணாஸ்ரம அமைப்பு முறையிலோ எந்தப் பாதிப்பும் இல்லை. அது நம்மைக் காப்பாற்றி வருகிறது.
- பெண்களுக்கு ஒட்டுரிமையே வழங்கக் கூடாது.
- மொழி வழி மாநிலங்களாக இந்தியா பிரிக்கப் பட்டதே தவறு.
- இராமனையும் கிருஷ்ணனையும் கடவுளர்களாக ஏற்றுக் கொண்டால் இஸ்லாமியர்கள் இங்கே வாழலாம்.
- ஆப்கானிஸ்தான், பர்மா, இலங்கை, நேபாளம், பூடான் உள்ளிட்ட அனைத்து நாடுகளும் இந்துக்களுக்கான தேசம்.
- 'பிராமணன்', 'சூத்திரன்' பாகுபாடுகளை மனுஸ்மிருதி வழியாக உருவாக்கி, கடமைகளையும் தண்டனைகளையும் வலியுறுத்திய 'மனு'தான் உலகின் முதலாவது சட்டமேதை; உலகில் உள்ள அனைத்து மக்களும் 'இந்துஸ்தான்' சென்று, 'பிராமணன்' காலில் விழ வேண்டும்.
- 'பிராமணன்' பிறப்பால் உயர்ந்தவர்கள்; அவர்கள் வணங்கத்தக்கவர் என்பதற்கு கோல்வாக்கர் ஒரு உதாரணம் கூறுகிறார்:

"தென்னாட்டில் ஒரு ஆங்கிலேய அதிகாரி இருந்தார். அவருக்கு உதவியாளராக அந்த மாநிலத்தைச் சார்ந்த ஒருவர் இருந்தார். அவர் நாயுடு வகுப்பைச் சார்ந்தவர். அந்த ஆங்கிலேய அதிகாரியின் பியூனாக இருந்தவர் ஒரு பிராமணர். ஒரு நாள் அந்த ஆங்கிலேய அதிகாரி தனது 'பிராமண' பியூன் பின் தொடர வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது எதிரே அவரது உதவியாளராக இருந்த அந்த நாயுடு சமுதாயத்துக்காரர் வந்தார். ஆங்கிலேய அதிகாரியைப் பார்த்து கை குலுக்கினார். ஆனால் பிராமண பியூனைப் பார்த்தவுடன் காலைத் தொட்டு வணங்கினார். அதைப் பார்த்து வியப்படைந்த ஆங்கிலேயே அதிகாரி, 'நான் உன்னுடைய பெரிய அதிகாரி. என்னிடம் நீ கை தான் குலுக்கினாய். ஆனால் என்னுடைய பியூனின் காலைத் தொட்டு கும்பிடுகிறாயே, இது என்ன பிரச்சினை?' என்று கேட்கிறார். அதற்கு அந்த உதவியாளர் பதில் சொல்கிறார். 'நீங்கள் என்னுடைய பெரிய அதிகாரியாக இருக்கலாம்; ஆனால் நீங்கள் ஒரு மிலேச்சர். அவர் பியூனாக இருக்கலாம்; **ஆனால் நாங்கள் வணங்கக் கூடிய பிராமண சமூகத்தைச் சார்ந்தவர். அவரைத் தொழ வேண்டியது எனது கடமை என்று பதில் சொன்னார். இதுதான் இந்து தர்மம்.**"

(குரு கோல்வாக்கர் எழுதிய 'Bunch of thoughts' நூல் பக்கம் 138-139)

ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன்பகவத் அவர்களே கோல்வாக்கரின் பல சிந்தனைகளை இப்போது ஏற்க முடியாது என்று வெளிப்படையாக அறிவிக்கும் நெருக்கடிக்கு உள்ளானார். ஆனால் இப்போது மோடி ஆட்சியின் கலாச்சாரத் துறை கோல்வாக்கரைக் கொண்டாடுகிறது.

## 'ஆர்.எஸ்.எஸ். இல்லாத இந்தியாவை' உருவாக்கக் களம் கண்ட உச்சநீதிமன்ற நீதிபதி பி.பி. சாவந்த்



உச்சநீதிமன்ற நீதிபதியாகி ஓய்வு பெற்ற பிறகும் விளிம்பு நிலை மக்களான தலித், இஸ்லாமியர், ஆதிவாசிகளுக்காகப் போராட்டக் களத்தில் நின்றவர் நீதிபதி பி.பி. சாவந்த். அண்மையில் முடிவெய்தி விட்டார். அவர் வழங்கிய தீர்ப்புகள் சமூக நீதி, மாநில உரிமை வரலாறுகளில் என்றென்றும் உயிர்ப்புடன் இருக்கும். எதிர்கால தீர்ப்புகளுக்கு வெளிச்சம் பாய்ச்சும்! எஸ்.ஆர். பொம்மை வழக்கில் ஆளுநர்கள், மாநில அரசுகளைக் கலைக்கும் தங்கு தடையற்ற அதிகார முறைகேடுகளுக்கு கடிவாளம் போட்டு, அவற்றில் நீதிமன்றம் தலையிட உரிமை உண்டு என்று தீர்ப்பளித்து, மாநில உரிமைக்கு வலு சேர்க்கும் தீர்ப்பை வழங்கி இந்தியா மதச்சார்பற்ற நாடு என்பதையும் உறுதி செய்தார்.

மண்டல் பரிந்துரை அடிப்படையில் 27 சதவீத பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டை எதிர்த்த வழக்கில் (இந்திரா சகானி) அரசியல் சாசன அமர்வில் ஒருவராக இருந்து சமூக நீதியின் நியாயங்களுக்கு தனது தீர்ப்பு வாசகங்கள் வழியாக வலிமை சேர்த்தார்.

மக்கள் எண்ணிக்கையில் ஒரு சிறு பிரிவினராக இருப்பவர்களின் நலக் கண்ணோட்டத்தில் தான் தேசத்தின் முன்னேற்றம் மதிப்பிடப்படுகிறது. அவர்கள் உருவாக்கித் தரும் கொள்கைகளே தேச நலனைப் பாதுகாக்கும் கொள்கையாகி விட்டது என்று கூறியதோடு ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் நலன் மட்டுமே ஒட்டு மொத்த தேச மக்களின் நலனைவிட மேலானது; முக்கியமானது என்ற பார்வையில் அரசு நிர்வாகமும் ஒரு சார்பாக செயல்படுகிறது என்று தனது தீர்ப்பில் எழுதினார்.

1871ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அதிகாரியாக செயல்பட்ட டாக்டர் டபிள்யூ ஆர். கார்னிஷ், அனைத்துத் துறைகளிலும் பார்ப்பனர் ஆதிக்கம் நிறைந்து வழிவதை சுட்டிக்காட்டி, 'பார்ப்பனக் கண்ணாடி வழியாகவே' நாட்டின் முன்னேற்றம் பார்க்கப்படுகிறது என்று வெளிப்படையாகவே அறிக்கையில் பதிவு செய்தார். பி.பி. சாவந்த், இதே கருத்தை ஒரு சிறு பிரிவினர் தரும் 'Prescription' என்ற வார்த்தையில் குறிப்பிட்டார்.

பி.பி. சாவந்த், பதவி ஓய்வுக்குப் பிறகு மக்கள் தொண்டாற்ற வந்தார். 'ஆர்.எஸ்.எஸ். இல்லாத இந்தியாவை உருவாக்க ஒன்றுபடுவோம்' என்ற முழக்கத்தை முன் வைத்து, அவரும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி பி.ஜி. கோல்சேவும் இணைந்து, 'ஆர்.எஸ்.எஸ். முக்த் பாரத்' இயக்கத்தைத் தொடங்கினார்கள். பல்வேறு தலித், முஸ்லிம், ஆதிவாசிகள் அமைப்புகள் இந்தக் குடையின் கீழ் கொண்டு வரப்பட்டன. 2015இல் இந்த அமைப்பு நடத்திய மாபெரும் பேரணியை முடக்குவதற்கு மகாராஷ்டிரா ஆட்சியின் காவல்துறை கடும் நெருக்கடிகளை கெடுபிடிகளைத் தந்தது. தலைவர்கள் உரையை திரைக்காட்சி வழியாக ஒளிபரப்பத் தடை போட்டனர். நீதிபதிகள் இதை எதிர்த்து மக்களுக்காக வீதிக்கு வந்து போராடினார்கள். 'கழகங்கள் இல்லாத தமிழகம்' என்ற முழக்கத்தோடு தமிழ்நாட்டில் கால்பதிக்க முயன்ற பா.ஜ.க., இப்போது அ.இ.அ.தி.மு.க. என்ற கழகத்தின் தோள் மீது சவாரி செய்து கொண்டிருக்கிறது.

ஆனால், ஆர்.எஸ்.எஸ். இல்லாத இந்தியாவுக்காக நாட்டின் மிக உயர் பதவியிலிருந்த பி.பி.சாவந்த், பதவி ஓய்வுக்குப் பிறகும் மக்களை அணி திரட்டிய பெருமைக்குரியவராக உயர்ந்து நிற்கிறார். பதவிக்கு பெருமை சேர்த்த போராளிக்கு நமது வீரவணக்கம்!

## அரியலூரில் கழகம் நடத்திய ஒரு நாள் பயிற்சி வகுப்பு

20.02.21 அன்று திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கடலூர் மற்றும் அரியலூர் மாவட்டம் இணைந்து நடத்திய ஒருநாள் பயிலரங்கம், ஆண்டிமடத்தில் பெரியார் - அண்ணா அரங்கில் நடைபெற்றது. கடலூர் மாவட்ட அமைப்பாளர் அ.மதன்குமார், கடவுள் மறுப்பு கூறி நிகழ்வை தொடங்கி வைத்தார்.

முதல் நிகழ்வாக தலைமைக் குழு உறுப்பினர் மயிலாடுதுறை ந. இளையராஜா, 'பயிலரங்கத்தின் நோக்கம் மற்றும் நடப்பு அரசியல்' குறித்து உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து 'திராவிட இயக்க வரலாறு' குறித்து தஞ்சை மாவட்டத் தலைவர் சாக்கோட்டை இளங்கோவன் உரையாற்றினார். மதிய உணவுக்குப் பிறகு 2.30 மணியளவில் பெரம்பலூர் மாவட்ட தலைவர் துரை. தாமோதரன், அறிவியல் பூர்வமாக கடவுள் மறுப்பு நிகழ்ச்சிகளை கலை வடிவில் நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார், 'அமைப்பாவோம்' எனும் தலைப்பில் உரையாற்றினார். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'பெரியாரிய பார்வையில் அம்பேத்கர்' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

பயிலரங்கத்தில் கலந்து கொண்ட புதிய தோழர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. பயிலரங்கம் நடைபெறுவதற்கு மதிய உணவும், அரங்கமும் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் சௌந்தரராஜன் ஏற்பாடு செய்தார். பயிலரங்கம் சிறப்பாக நடைபெறுவதற்கு கருவேப்பிலங்குறிச்சி



அறிவழகன் மற்றும் ஆண்டிமடம் இராவண கோபால் உதவி செய்தனர்.

நிகழ்ச்சியை கடலூர் மாவட்ட அமைப்பாளர் அ.மதன்குமார் ஒருங்கிணைத்தார்.

தலையங்கம்

# இதற்குப் பெயர் ‘இந்துத்துவா’ ஜனநாயகம்

பா.ஜ.க.வும் சங் பரிவாரங்களும் பேசும் இந்துத்துவா அரசியல் மக்கள் உரிமைகளுக்கும் சுயமரியாதைக்கும் நேர் எதிரானது. சுருக்கமாக இப்படி கூறலாம். பெரும்பான்மை உழைக்கும் மக்களை, பார்ப்பனிய வைதிக ஒடுக்குமுறை பண்பாட்டுக்கு சேவகம் செய்ய வைத்து மக்களின் சுயமரியாதையை அதற்கு விலையாகக் கேட்கும் கொள்கையே இந்துத்துவா. சமூக அதிகாரம் ஒரு குறிப்பிட்ட ஆதிக்க சக்திகளிடமே தொடர வேண்டும் என்ற பார்ப்பனிய கோட்பாட்டையே அரசியலிலும் அவர்கள் செயல்படுத்துகிறார்கள். அதற்காக இந்தியாவின் ஆட்சி அதிகாரம் முழுமையும் பா.ஜ.க.வின் அதிகாரத்துக்குள் கொண்டு வரத் துடிக்கிறார்கள்.

மதத் தாவல் சட்ட விரோதம் என்று சட்டம் போடுகிறார்கள். ஆனால், ‘கட்சித் தாவல்’ செய்வதை ஊக்குவிக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் கூட இல்லாத மாநிலங்களில் ஆட்சி அதிகாரங்களை முறைகேடுகளாக ஒளிவுமறைவின்றி பயன்படுத்தி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற ஆட்சிகளைக் கவிழ்க்கிறார்கள். இப்போது புதுச்சேரியிலும் நாராயணசாமி அவர்களை முதல்வராகக் கொண்டு நடந்த காங்கிரஸ் ஆட்சியை கவிழ்த்திருக்கிறார்கள். அடுத்த வாரத்தில் மாநில சட்டசபை தேர்தலுக்கான அறிவிப்பு வரப்போகும் நேரத்தில் இந்தக் கவிழ்ப்பு நடந்திருக்கிறது. மக்கள் வாக்களித்து தேர்ந்தெடுத்த ஒரு ஆட்சியை ஆளுநர் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கலைப்பது நியாயமல்ல என்ற நேர்மையோ, அறமோ இவர்களிடம் கிஞ்சித்தும் இல்லை.

சட்டப் புத்தகங்களையும் அதன் விதிகளையும் புரட்டிப் பார்ப்பது ஒன்று மட்டுமே நாடாளுமன்ற ஜனநாயகத்தை நீடிக்கச் செய்து விடாது. சட்டத்தின் உணர்வுகளை மதிப்பதும் அதன் வழியில் உருவாக்கப் படும் மரபுகளைப் பாதுகாப்பதுமே மக்கள் ஜனநாயகத்தின் அடிப்படை. மோடி மீண்டும் பிரதமராக தேர்வு செய்யப்பட்டவுடன் தனது ‘மன்கி பாத்’ வானொலி உரையில் கூறியதை நினைவுபடுத்த வேண்டும்.

“சட்டங்களையும் விதிகளையும் கடந்து நமது பண்பாட்டு மரபில் ஜனநாயகம் பிரிக்க முடியாதபடி புதைந்து நிற்கிறது. ஜனநாயகம் நமது கலாச்சாரம்; ஜனநாயகம் நமது பாரம்பர்ய மரபு” என்று பேசினார். இந்த மரபும், பண்பும் தான் இப்போது நாட்டில் அவரது ஆட்சியில் பிற்பற்றப்படுகிறதா?

6 காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களையும் ஒரு தி.மு.க. உறுப்பினரையும் பா.ஜ.க. தனது வலைக்குள் சிக்க வைத்தது; காங்கிரஸ் உறுப்பினர்கள் பா.ஜ.க.வுக்கு தாவி, சட்டமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகினர். 30 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட புதுச்சேரி சட்டமன்றத்தில் கட்சி மாறி பதவி விலகியவர்கள் 7 பேர்; மீதமுள்ள 23 இடங்களில் 12 பேர் ஆளுங்கட்சிக்கு ஆதரவாளர்கள். (காங்கிரஸ்-9; தி.மு.க. 2; இடதுசாரி ஆதரவு சுயேச்சை-1), எதிர் தரப்பில் ரங்கசாமி காங்கிரஸ் (7 பேர்), அ.தி.மு.க. (4 பேர்), மொத்தம் 11 பேர். வாக்கெடுப்பு நடத்தினால் நாராயணசாமி ஆட்சியே வெற்றி பெறும் நிலை இருந்தது. இதையும் குறுக்கு வழியில் தடுத்து விட்டார்கள். 2016இல் நடந்த சட்டமன்ற தேர்தலில் ஒரு இடம் கூட பெறாத பா.ஜ.க., ஆளுநர் வழியாக நியமன உறுப்பினர்களாக 3 பா.ஜ.க.வினரை நியமித்தது. இதற்கு முதலமைச்சர் பரிந்துரை வேண்டும் என்ற விதியையும் புறந்தள்ளினார்கள். நியமனமான பா.ஜ.க.வினரில் தேர்தலில் போட்டியிட்டு ‘டெபாசிட்’ தொகையைக்கூட வாங்க முடியாமல் மக்களால் புறக்கணிக்கப்பட்ட வர்களும் உண்டு.

மூன்று பேரில் ஒரு நியமன உறுப்பினர் இந்த ஆண்டு ஜனவரியில் இறந்தார். உடனே அவசர அவசரமாக அந்த இடத்தில் மற்றொரு பா.ஜ.க.வைச் சார்ந்தவரை ஆளும் கட்சி உறுப்பினராக நியமித்தது. ஜூன் 8ஆம் தேதி சட்டசபையின் ஆயுட்காலம் முடிவடையும் நிலையில் இவ்வளவு குறுகிய காலத்தில் உறுப்பினர் நியமனம் செய்த போதே ஆட்சிக் கவிழ்ப்புக்கு தயாராகி விட்டார்கள் என்பதை உணர முடிகிறது. நியமன உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது என்றும், இதுவரை புதுச்சேரி சட்டசபையில் அவர்கள் வாக்களித்தது இல்லை என்றும் குடியரசுத் தலைவர் தேர்தலில்கூட வாக்களிக்கவில்லை என்றும் சட்ட நிபுணர்கள் கூறுகிறார்கள். இந்த நிலையில் சட்டப் பேரவைத் தலைவரையும் ‘சரிகட்டி’ பா.ஜ.க.வினர் அவர் வழியாக நியமன உறுப்பினர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு என்று அறிவிக்கச் செய்து கடைசி நேரம் வரை ‘குதிரை பேரம்’ நடத்தி ஆட்சியைக் கவிழ்த்திருக்கிறார்கள். தேர்தலில் ‘டெபாசிட்’ தொகைகூட பெற முடியாது மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி மீது நம்பிக்கை இல்லை என்று கூறி ஆட்சியைக் கவிழ்த்திருக்கிற அவலம் நடந்து முடிந்திருக்கிறது.

அதனால் தான் ‘இந்துத்துவா பார்ப்பனியம்’ வெகு மக்களுக்கு எதிரானது ‘வேத புரோகித மனுசாஸ்திர மேலாதிக்கத்தைத் திணிப்பதே அதன் பண்பு என்று நாம் அழுத்தமாகக் கூறுகிறோம். காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் மக்கள் நலத் திட்டங்களை முடக்குவதற்காகவே கிரேன்பேடி என்ற ஆளுநரை டெல்லியிலிருந்து அனுப்பினார்கள். ஆட்சிக் காலம் முடியும் வரை அவர் தடைக் கற்களைப் போட்டு ஆட்சியின் செயல்பாடுகளை முடக்கினார். மக்களின் கடும் கோபத்துக்கும் ஆத்திரத்துக்கும் உள்ளான அவரை கடைசி நேரத்தில் திரும்ப அழைத்து ஒரு நாடகம் நடத்தினார்கள். வேறு ஒரு புதிய ஆளுநரை பொறுப்பாக்கி அவர் வழியாக ஆட்சிக் கவிழ்ப்பு வேலை முடிந்திருக்கிறது.

அருணாசலபிரதேசம், உத்தரகாண்ட், கோவா, மணிப்பூர், மத்திய பிரதேசம், கருநாடகம் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில ஆட்சிகளை ஆளுநரையும் தங்களிடமுள்ள வருமான வரித் துறை, சி.பி.அய்., அமுலாக்கத் துறைகளின் அதிகாரங்களையும் முறைகேடாகப் பயன்படுத்தி மிரட்டி கட்சி மாறச் செய்து ஆட்சியைக் கவிழ்த்தவர்கள், இப்போது புதுவையிலும் அரங்கேற்றியிருக்கிறார்கள். இந்துத்துவா அகராதியில் ஜனநாயகத்துக்கான இலக்கணம் இப்படித்தான் இருக்கும்.

# அறிவியலாளர்கள் எதிர்ப்பால் பல்கலைக்கழக மானியக் குழு பசு மாடு குறித்து நடத்தவிருந்த தேர்வு நிறுத்தப்பட்டது

அறிவியலாளர்கள் கடும் எதிர்ப்புக்குப் பிறகு மூடநம்பிக்கை கட்டுக் கதைகளைக் கொண்ட ‘காமதேனு பசு அறிவியல்’ தேர்வை ‘இராஷ்டிரிய காமதேனு அயோக்’ என்ற தேர்வை மத்திய அரசு நிறுவனம் நிறுத்தி வைத்துள்ளது. ஆன்லைன் வழியாக பிப். 25இல் இந்தத் தேர்வு நடக்கவிருந்தது.

மாணவர்களை ‘காமதேனு பசு அறிவியல்’ தேர்வு எழுதச் செய்ய ஊக்கு விக்குமாறு பல்கலைக்கழக மான்ய ஆணையம் (யுஜிசி) நாட்டின் அனைத்து பல்கலைக் கழகங்களுக்கும் உத்தரவிட்டிருக்கிறது. இது மூட நம்பிக்கையைப் பரப்பும் நடவடிக்கை என கேரள அறிவியல் இயக்கம் (கேரள சாஸ்திரிய சாகித்ய பரிசத் - கேஎஸ்எஸ்வி) மற்றும் அறிவியல் அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

பல்கலைக் கழக துணைவேந்தர்களுக்கான சுற்றறிக்கையில், “மாட்டு அறிவியலில் ஒரு நபர் எவ்வளவு நிபுணத்துவம் பெற்றிருக்கிறார் என்பதை சோதிக்க ‘காமதேனு கோ விஞ்ஞான் பிரச்சார் தேர்வு’ எழுதுமாறு (யுஜிசி) மாணவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. யுஜிசி செயலாளர் ரஜ்னீஷ் ஜெயின் கையெழுத்திட்ட சுற்றறிக்கையை துணைவேந்தர்களுக்கு அனுப்பியது. மூட நம்பிக்கையை பரப்புவதை நோக்கமாகக் கொண்டது காமதேனு தேர்வு என்பதால் யுஜிசி உத்தரவை திரும்பப் பெற வேண்டும்” என்று சாஸ்திர சாகித்ய பரிஷத் கோரியுள்ளது. அரசு நிறுவனமான ராஷ்டிரிய காமதேனு ஆணையம் பிப்ரவரி 25 ஆம் தேதி ஆன்லைன் தேர்வை நடத்த திட்டமிட்டது. இதற்காக மலையாளம் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் ஆய்வுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

எந்த ஆதாரமும், விவாதமும், விஞ்ஞான அடிப்படையும் இல்லாமல் தயாரிக்கப்பட்ட இந்த புத்தகங்களில் அபத்தங்கள் மற்றும் முட்டாள்தனங்களின் நீண்ட பட்டியல் உள்ளது. “நாட்டு மாடுகளின் நரம்புகள் சூரிய ஒளியை உறிஞ்சி வைட்டமின்-டி உற்பத்தி செய்கின்றன; பசுக்களின் கண்கள் நுண்ணறிவின் மையங்கள்; அவற்றின் மடிகளிலிருந்து சுரப்பது அமிர்தமாகும்; அவற்றின் வால்கள் உயர்ந்த ஆன்மீக மண்டலங்களுக்கு செல்வதற்கான ஒரு படிக்கட்டாகும்; நாட்டு மாடுகளின் பால் மனிதர்களை அணுக்கதிர்வீச்சிலிருந்து பாதுகாக்கிறது; நாட்டு மாடுகளின் இளம் மஞ்சள் பாலில் தங்கம் உள்ளது; கோமாதாவிலிருந்து கிடைக்கும் பாலும் தயிரும் மூத்திரமும் சாணியும் நெய்யும் சமஅளவில் சேர்த்து தயாரிக்கும் பஞ்ச காவ்யம் ஒரு சித்த மருந்தாகும்; நில அதிர்வு களுக்கும் பசுவதை செய்யப்படும்போது ஏற்படும் எதிர்மறை ஆற்றல் அலை களுக்கும் இடையில் பிரிக்க முடியாத இணைப்பு உள்ளது” என்றெல்லாம் புத்தகங்களில் அறிவியல் அடிப்படையே இல்லாத கருத்துகளை எழுதி வைத்து உள்ளனர்.

ஒரு அரசு நிறுவனம் இதுபோன்ற புத்தகங்களை வெளியிட்டுள்ளது என்பது அதிர்ச்சியளிப்பதாகும். அத்தகைய ஒரு புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு தேர்வுகளை எழுதுமாறு மாணவர்களை வற்புறுத்த வேண்டும் என உயர்கல்வி அமைப்புக்கு தலைமை வகிக்கும் யுஜிசி கேட்டுக் கொண்டுள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்க நடவடிக்கை. யுஜிசியின் இந்த நடவடிக்கை அறிவியல் விழிப்புணர்வையும், கேள்வி அறிவையும் வளர்ப்பது குடிமக்களின் கடமை என்ற நமது அரசியலமைப்பின் 51ஏ (எச்) பிரிவுக்கு எதிரானது.

## வினா விடை

- தவறு பா.ஜ.க. மீது இல்லை; சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்சியில் தக்க வைத்துக் கொள்ளாத நாராயணசாமி மீது தான் குற்றம்.
  **– தொலைக்காட்சியில் பா.ஜ.க. விவாதம்**

  ஆமாம்! வீடு புகுந்து பணம், நகைகளைக் கொள்ளையடித்தவன் மீது குற்றம் அல்ல; அதைப் பாதுகாப்பாக தக்க வைத்துக் கொள்ள முடியாத வீட்டுக்காரர்தான் குற்றவாளி!

- ம.பி. முதல்வர் சவுகான் அரசு விடுதியில் கொசுக்கடிக்கு உள்ளானதால் அதிகாரி பதவி நீக்கம். **– செய்தி**

  கடித்த கொசு வேறு மதத்தைச் சார்ந்த கொசுவாக இருக்கலாம்! பாவம்! அந்த அதிகாரியை விட்டு விடுங்கள்!

- பெட்ரோல், டீசல் விலை உயர்வு பற்றிய கேள்விகளுக்கு பதிலளிப்பது தர்மசங்கடமாக இருக்கிறது. **– நிர்மலா சீத்தாராமன்**

  அதை உங்கள் கட்சி தமிழ்நாட்டு தலைவர்களிடம் விட்டுவிடுங்கள். பெட்ரோல் விலை உயர்வது மோடி ஆட்சியின் பொருளாதார வளர்ச்சியே என்று பதிலடி தருவார்கள்!


- பா.ஜ.க.வில் தேர்தலில் போட்டியிட விருப்ப மனு கோரும் திட்டமில்லை.
  **– பா.ஜ.க. முருகன்**

  ஆமாம்! இங்கே ஆளுநர் பதவிக்குத்தான் போட்டா போட்டி.

- வீடு இல்லாத அனைவருக்கும் 2 சென்ட் நிலம்; நிலத்தில் வீடும் கட்டித் தரப்படும். **– எடப்பாடி அறிவிப்பு**

  கார் இல்லாத அனைவருக்கும் பெட்ரோலுடன் புத்தம் புதிய கார், டிரைவரை அரசு செலவில் வழங்க அடுத்த அரசாணை தயாராகி வருகிறது.

## உயர்ந்தவர் யார்?



ஓட்டல்காரன் – அன்னதானப் பிரபு ஆவானா ? சம்பள உபாத்தியாயர் – குருநாதனாவானா ? தாசி – காதலியாவாளா? என்பது போலத்தான் தன்தன் நலனுக்கு, தன்தன் பொறுப்புக்கு ஆகக் காரியம் செய்யும் எவனுடைய காரியம் – எப்படிப் பட்டதாயினும் அது சாதாரண ஜீவ சுபாவமே ஒழிய போற்றக்கூடியதாகாது. அப்படியில்லாத தன்மை, செய்கை, வாழ்க்கை கொண்ட மனிதர்கள் – அதாவது தன்னைப் பற்றிய கவலையில்லாமல், பிறருக்கு என்று தன்னை ஒப்படைத்துக் கொண்டு தொண்டாற்றுகிறவன் மதிக்கப்பட்டே தீருவான். அத்தொண்டால் பாதகமடையும் தனிப்பட்டவர்கள் – தனிப்பட்ட வகுப்புகள், கும்பல்கள் அவனை மதிக்காமல் இருக்கலாம்; அவமதிக்கலாம்; அது, பொதுவாக மதிக்காததாகாது.

**விடுதலை 08.04.1930**

**‘பெரியாரும்–மார்க்சியமும்’ தலைப்பில் கொளத்தூர் மணி உரை (2)**

# பிறவி ஆதிக்கம் – பணக்கார ஆதிக்கம் – இரண்டையும் எதிர்க்க வேண்டும் என்று கூறியவர் பெரியார்

*குமரி மாவட்டம் குழித்துறையில் ஜன.24, 2021 அன்று ‘பெரியாரும் மார்க்சியமும்’ என்ற தலைப்பில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிகழ்த்திய உரை இது.*

*எம்.சி.பி.அய்.(யு) என்ற மார்க்சிய கட்சி - தமிழ்நாட்டில் மார்க்சியர்கள் - பெரியாரியலை உள்வாங்கிக் கொள்ளவில்லை என்ற விமர்சன அறிக்கையை வைத்திருந்தது. அதைத் தொடர்ந்து இக்கட்சி வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையில், “சாதி–மதப் பிரிவினை சக்திகள் வலிமை பெற்றிருக்கும் இக்காலக்கட்டத்தில் பெரியார், அம்பேத்கரின் தேவையை கட்சி பூரணமாக உணர்ந்துள்ளது” என்று இந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. அந்தப் பின்னணியில் இந்தக் கருத்தரங்கையும் ஏற்பாடு செய்தது குறிப்பிடத்தக்கது. நிகழ்வில் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

பின்னர் ஓரிடத்தில் சீனாவைப் பற்றி பேசுகிற போது, ‘சீனர்களின் கதி’ என்ற தலைப்பில் பேசுகிறார். “என்று முதலாளிகளின் ஏதேச்சாதிகாரம் உலகினின்றும் ஒழியுமோ, அன்றே உலகத்திற்கு விடுதலை, அன்றுதான் ஏழைகள் புத்துயிர் பெற்று இன்புறுவார்கள்” என்று.1925ஆம் ஆண்டு ஆகஸ்டில் பேசிய பேச்சு இது. அப்பொழுதெல்லாம் காங்கிரசில் தான் இருக்கிறார். ஆனால், மனம் ஒப்புக் கொள்ளாமல் காங்கிரசில் தொடர்ந்து கொண்டு இருக்கிறார். இது அந்த காலகட்டம். தொடர்ச்சியாக நாம் சொல்லிக் கொண்டே போகலாம். “பணக்காரன் என்பதே, தேசத்தையும் ஏழைகளையும் குடியானவர் களையும் தொழிலாளர்களையும் கெடுத்துதான் பணம் சம்பாதித்தவர்கள் என்பதுதான் சத்தியம்”. இதுவும் 1925ஆம் ஆண்டு பேசிய பேச்சு தான். இதையெல்லாம் அவர் காங்கிரசில் இருக்கும் போதே பேசுகிறார். அந்த கட்சியில் நாம் இருக்கின்றோமே என்கிற மன உறுத்தல் அவருக்கு இருந்தது. இன்னொரு பக்கம், உழைக்கும் மக்களுக்கு அரசு நிர்வாகத்தில் பங்கு கொடுக்கிற, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் என்பதை, கொள்கையளவில் கூட ஏற்க மறுக்கிறார்களே, நீ ஒன்றும் செய்ய வேண்டாம், நீ ஆட்சியிலில்லை, அப்பொழுது இருந்தது நீதிக்கட்சி ஆட்சி. கொள்கையை ஏற்றுக் கொள் . ஒரு வேளை நீங்கள் ஆட்சிக்கு வந்தால், நடைமுறை படுத்துவோம் என்று உறுதி கொள்ளுங்கள் என்றால் கூட, காங்கிரஸ் ஒத்துக் கொள்ளாத கால கட்டம் அது. இதிலிருந்து அவர் வெளியே வருகிறார். அதை விரிவாக பேசவேண்டியது இல்லை.

இந்திய தொழிலாளர்களைப் பற்றி எப்போது அவர் கருத்து மேலும் அழுத்தமாக வெளிப்படுகிறது என்றால் 1927 ஆம் ஆண்டு கோவையில் ஒரு வேலை நிறுத்தம் நடக்கிறது. 1927 ஆம் ஆண்டு கோயமுத்தூரில் ஜவுளித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம். பெரியாருடைய நண்பர், சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்தவர்தான், இரத்தின சபாபதி முதலியார். அவர் பெயரால்தான் ஆர்.எஸ்.புரம், கோவையில் அமைந்து இருக்கிறது. அவருடைய தலைமையில் தான் அது நடக்கிறது. அந்த போராட்டத்தில் பெரியார் பேசிய பேச்சு குறித்து சொல்ல வேண்டும். ஏனென்றால் அந்த சமயத்தில் காங்கிரசை விட்டு வெளியே வந்து, சுயமரியாதை இயக்கத்தை தொடங்கி விட்டார். 1925ஆம் ஆண்டு கடைசியில் இயக்கம் தொடங்கியாயிற்று. 1927 ஆம் ஆண்டு பேசுகிறார்.

> *“பிறவியினாலேயே உயர்ந்தவன் என்று சொல்லிக் கொள்ளும் பார்ப்பனீயத்தை யும் அதன் ஆதிக்கத்தையும் வேரோடு அழிக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதோ, அது போலவே பண முடையவன் உயர்ந்தவன் என்கிற தத்துவத்தையும் பணக்கார ஆதிக்கத்தையும் அடியோடு அழிக்க வேண்டியது என்பதும் அவ்வளவு முக்கியமானது என்பதே நம் அபிப்பிராயம்”.*

இதை வேலை நிறுத்தத்தில் பெரியார் பேசுகிறார். இப்பொழுது சிக்கல் எனக்கு என்னவென்றால். இரண்டையும் என்னால் செய்ய முடியாது, சக்தி குறைவு, அவ்வளவு செய்ய சக்தி குறைவு. அப்படி சொல்லிவிட்டு,



> *“அதை விட இதற்கு என்ன அவசரம் என்று பார்க்க வேண்டியிருக்கிறதே அல்லாமல், தவிரவும் பிறவியில் உயர்வு என்கிற கொடுமை ஒழிந்தவுடன், பணத்தால் உயர்வு என்கிற கொடுமை ஒழிக்கும் வேலை தான், பொது நல சேவையாக ஏற்பட வேண்டும் என்பது நமது அபிப்பிராயம். அது தான் இயற்கையானதும் ஆகும். ஆகவே இந்த இரண்டு காரியமும் முடிந்த பிறகு தான், சர்க்காரின் கொடுமையும் ஆதிக்கமும் தானாகவே ஒழிந்து விடும். முன் சொன்ன இரண்டையும் வைத்துக் கொண்டு, சர்க்கார் ஆதிக்கத்தை ஒழிப்பது என்பது, உயர்ந்த ஜாதியான் என்பவன் இன்னும் உயர்வதற்கும், பணக்காரன் என்பவன் இன்னும் கொஞ்சம் பணக்காரனாவதற்கு உபயோகப் படுவதோடு, உயர்ந்த ஜாதியான் என்பவன் ஜாதித் திமிரோடு பணத்திமிரும் அடையவும், பணக்காரன் என்பவனுக்கு பணத்திமிரோடு ஜாதித் திமிரும் அமையவும் காரணமாகிவிடும்”.*

அப்படி இரண்டையும் ஒழிக்க வேண்டிய தேவை இருக்கிறது; என் சக்திக்கு இது ஒன்றை செய்துக் கொண்டிருக்கிறேன். இது தான் அவருடைய பார்வையாக பெரியார் சொல்லுகிறார். “நமது நாட்டில் கிளர்ச்சி, வெகு சீக்கிரத்தில் உண்மையான தொழிலாளர்கள் கிளர்ச்சி ஏற்படப் போகிறது என்பதை, முதலாளிமார்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்” என்று அந்த உரையில் பெரியார் பேசுகிறார். அப்போது அவர் என்ன கருத்தை கொண்டிருக்கிறார் என்பதற்காகச் சொல்லுகிறேன்.

- **காங்கிரசிலிருந்து கொண்டே பொதுவுடைமை பேசினார், பெரியார்.**
- **நீதிக் கட்சியை ஆதரித்த பெரியார், அதில் தலைவர்களாக இருந்த ஜமீன்தார்களையும் மிட்டா மிராசுதாரர்களையும் கடுமையாக எதிர்த்தார்.**
- **தீண்டப்படாத மக்களுக்கு ‘தனிக் கிணறு’ திறக்கக் கூடாது; பொதுக் கிணற்றில் நீர் எடுக்கப் போராட வேண்டும் என்றார்.**
- **பார்ப்பனரல்லாதாரில் 2 சதவீதம் பேர் மட்டுமே படிக்கத் தெரிந்த காலத்தில் ‘ரிவோல்ட்’ என்ற புரட்சி ஆங்கில இதழை சோவியத் புரட்சி நடந்த நவம். 7ஆம் தேதியை தேர்வு செய்து தொடங்கினார்.**

சுயமரியாதை இயக்கம் என்பது முற்றும் முழுதாக ஜாதி ஒழிப்பும் பெண்ணுரிமையையும் பேசிக் கொண்டிருந்தாலும், அவர் இந்த கருத்தை உரையாடியவராகவே இருந்துக் கொண்டே இருக்கிறார். அதனால் ஈர்க்கப்பட்டுதான் பலபேர் அவரோடு இணைகிறார்கள், ஜீவானந்தம் போன்றவர் களெல்லாம். சிராவயல் என்கிற இடத்தில் ஜீவா ஒரு ஆசிரமம் நடத்திக் கொண்டிருக்கிறார், காந்தி ஆசிரமம். பெரியாரை காந்தி ஆசிரமத்திற்கு அழைக்கிறார் அவர். காந்தி ஆசிரமத்தில் ஒரு வாசகசாலை ஒன்றைத் தொடங்கிறார்கள். ஒரு கிணறு ஒன்று, காந்தி கிணறு என்று, அதை வெட்டி வைத்திருக் கிறார்கள். அப்போது காங்கிரஸ் அரிஜன நிதி என்று ஒன்றை சேர்த்து வைத்துக்கொண்டு, தாழ்த்தப்பட்ட மக்களின் குடியிருப்பு பகுதியில், அவர்களுக்கு என்று தனியாக ஒரு கோவில் கட்டுவது, தனியாக கிணறு வெட்டித் தருவது என்பதெல்லாம் காங்கிரசார் செய்து கொண்டிருந்தார்கள். பெரியார் சொல்கிறார். வாசகசாலை வேண்டுமென்றால் திறந்து வைக்கிறேன். ஏனென்றால் அது எல்லோருக்கும் படிப்பதற்காக பயன்படும். அந்த கிணற்றை நான் திறந்து வைக்க வருந்துகிறேன் என்று சொல்லுகிறார். பொதுக் கிணற்றில் நீர் எடுக்க போராட வேண்டுமே தவிர, தனிக் கிணறு வெட்டிக் கொடுப்பது என்பது, நிரந்தர வேலி போட்டு அவர்களை வேறு பக்கமாக நிறுத்தி வைப்பதாக ஆகிவிடும். எனவே கேட்டுக் கொள் கிறேன் - மக்களிடம் பேசுகிறார் - நீங்கள் தாகத்தால் செத்துப் போவதாக இருந்தாலும், தனிக் கிணற்றில் நீர் எடுக்காதீர், பொதுக் கிணற்றில் நீர் எடுக்கப் போராடுவோம் என்று அவர் சொல்லுகிறார். அது தான் அவர் சொல்லுகிறார். அந்த கிணறு எதற்கு, நான் காங்கிரஸ் தலைவராக இருந்தபோது எனக்கு ரூ. 48,000 பணம் அரிஜன நிதியில் இருந்து அனுப்பி வைத்தார்கள். 1920-களில் அப்பொழுது ரூ. 48,000 என்பது பெரிய தொகை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிக் கிணறு வெட்டித் தரச் சொன்னார்கள். அந்தப் பணத்தை நான் அப்பொழுது அப்படியே திருப்பி அனுப்பினேன். வேறு நிதிக்கு செலவு செய்கிறேன் என்று சொன்னதற்கு, ஏற்றுக் கொள்ளவில்லை. நான் தனிக் கிணறு வெட்ட முடியாது என்று கூறி திருப்பி அனுப்பினேன் என்று சொல்கிறார். ஆங்கிலேயன் கூட போராடுகிற உன்னால், இங்கு இருக்கிற ஆதிக்க ஜாதியினரிடம் போராட முடியாதா, என்று காங்கிரசுக்கு கேள்வி வைக்கிறார், பெரியார்.

அந்த காலகட்டத்திற்கு அப்புறம் தான், பெரியாரின் உரையை கேட்டுத் தான் ஜீவா பெரியாரோடு சேருகிறார். அதற்கப்புறம் அந்த குழப்பம், அது இப்போது தேவையில்லை என்றாலும் சொல்கிறேன். அதற்கு அடுத்ததாக தோழர்களே, 1928ஆம் ஆண்டு, இந்த கருத்துகளை பரப்புவதற்கு ஒரு ஆங்கில பத்திரிக்கை ஒன்றைத் தொடங்குகிறார் பெரியார். இரண்டு காரணங்களைச் சொல்கிறார். ஒன்று, சென்னை மாகாணத்தில் மட்டும், அதுவும் தமிழ் பேசும் பகுதிகளில் மட்டும் தான், நாம் பேசுகிற கொள்கைகளெல்லாம் எழுத்தாகப் போய் எல்லோருக்கும் சேருகிறது. இது பிற மாநிலங்களில் வசிக்கிறவர்களுக்கும், அதை விட குறிப்பாக நம்மை ஆட்சி செலுத்திக் கொண்டிருக்கும் ஆங்கிலேயருக் கும் தெரிய வேண்டும் என்பதற்காக, ஆங்கிலத்திலும் ஒரு பத்திரிக்கை தொடங்குகிறேன் என்று சொல் கிறார். அப்பொழுது எழுத, படிக்கத் தெரிந்த மக்கள் ஏழு சதவிகிதம் தான். அதில் மூன்று பேர் பார்ப்பானாக போய்விட்டான், ஒன்றரை சதவிகிதம் உயர்சாதிக் காரனாகப் போய் விட்டான். நம்மவர்கள் படித்தவர்கள் ஒன்றரை அல்லது இரண்டு சதவிகிதம் தான். ஆங்கில ஏடு எங்கே வாங்கப் போகிறார்கள்? இருந்தாலும் தொடங்கினார். அந்த ஏட்டுக்கு அவர் வைத்த பெயர் ரிவோல்ட் ‘Revolt’. புரட்சி என்ற பெயரை வைக்கிறார். புரட்சி என்ற பெயர் வைத்தது மட்டு மல்ல, அதை நவம்பர் 7ஆம் தேதி, 1928இல், ரஷ்ய புரட்சி நாளில் தான் அந்த ஏட்டை அவர் தொடங் கினார். அடுத்த ஆண்டும் அதில் எழுதுகிறார். கடந்த ஆண்டு உலகையே குலுக்கிய ரஷ்ய புரட்சி நாளில் நம் ஏட்டை தொடங்கினோம், இன்றோடு ஓராண்டு முடிந்து விட்டது என்று தலையங்கம் எழுதுகிறார். எனவே, இந்த சிந்தனை ஓட்டம் அவருக்கு 1928இல் வந்து விடுகிறது.

இப்படி தொடர்ச்சியாக இருந்த அவருடைய சில செய்திகளை நான் சொல்ல வேண்டும். ஒரு சில மாநாடுகளை பெரியார் நடத்தத் துவங்குகிறார். ஒன்று, ஜமீன்தார் அல்லாதவர்கள் மாநாடு, லேவாதேவி செய்யாதவர்கள் மாநாடு, இப்படி யெல்லாம் அல்லாதவர்கள் மாநாடுகள் நிறைய நடத்துகிறார், பெரியார். ஏனென்றால், அதில் இருப்பவர்களை கூப்பிட்டு, இதற்காக ஏன் நீங்கள் போராடக்கூடாது என்று கேட்பதுதான் நோக்கம். ஜமீன்தார் அல்லாதவர்கள் மாநாடு எங்கு நடக்கிறது என்றால், சேலத்தில் தான் நடக்கிறது. அந்த மாநாட்டில் அவர் சொல்கிறார், இந்த மாவட்டத்தில் தான், மூன்றில் ஒரு பங்கு நிலங்கள் ஜமீன்தார்களுக்கு சொந்தமாக இருக்கிறது. **“செல்வவான்கள் ஏழைகளின் வாக்கை ஓட்டுகளை விலைக்கு வாங்கித் தாங்களே ஆட்சியாளர்களாக வந்து விடக் கூடும். இதற்கு உதாரணம் வேண்டுமானால், சென்னை அரசாங்க நிர்வாகத்தை யும் சென்னை மாகாண ஸ்தலஸ்தாபன நிர்வாகத்தை யும் பார்த்தால் நன்றாக விளங்கும். சென்னை மாகாண முதல் மந்திரி ஒரு ஜமீன்தார்”.** அப்பொழுது, பொப்பிலி ராஜா இருக்கிறார். அவரை ஆதரிக்கிறார் பெரியார். மறந்து விடக்கூடாது.

நீதிக்கட்சியை பெரியார் ஆதரிக்கிறார். நீதிக்கட்சி முதலமைச்சர் பற்றி தான் அவர் பேசுகிறார். **“சென்னை மாகாண முதல் மந்திரி ஒரு ஜமீன்தார். சென்னை நகர ஸ்தல ஸ்தாபனச் சபை தலைவர், அதாவது நகராட்சி தலைவர், ஒரு லேவாதேவிக்காரர்”**. ராஜா சர் முத்தையா செட்டியார் இருக்கிறார். இவரும் நீதிக் கட்சிகாரர், பெரியாருடைய ஆதரவாளர். ஆனாலும் சொல்லுகிறார், எப்படியடா இவர்களெல்லாம் வந்தார்கள் ஆட்சிக்கு. **“அவன் ஜமீன்தார் காசு கொடுத்து ஓட்டு வாங்கிவிட்டான், இவன் லேவாதேவிக்காரன் காசு கொடுத்து ஓட்டு வாங்கி வந்திருக்கிறான். என்ன இவர்களுக்கு தனித் தகுதி இருக்கிறது, என்பதுவும், பிரத்தியக்ஷ உண்மையாகும். வேறு ஜில்லாக் களிலும் இது போலவே பெரிய முதலாளியோ, பெரிய லேவாதேவிக்காரரோ அல்லது ஜமீன் தாரரோ தான் தலைவராக இருக்கிறார்கள். இவர்கள் அந்த பதவியை அடைந்ததற்கு காரணம் எல்லாம், அவர்களின் பணக் கொழுப்பு விசேஷமே ஒழிய, புத்திக் கொழுப்பு விசேஷமில்லை என்பது எந்த மனிதனுக்கும் தெள்ளென விளங்கும்”** என்று சொல்லுகிறார்.

(தொடரும்)

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 25.02.2021**

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ‘சமூக நீதி சாதனையாளர்’ விருது பெற்றார் வே. ஆனைமுத்து



சர்வதேச சமூக நீதி நாளான பிப்ரவரி 20 - முன்னிட்டு 20.02.2021 அன்று 25க்கும் மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட ஊழியர் சங்கங்களை உள்ளடக்கிய தேசிய பிற்படுத்தப்படட ஊழியர் சங்கங்களின் பேரமைப்பின் சார்பில் ஓய்வறியா இட ஒதுக்கீட்டு போராளி, மண்டல் குழு அமைக்கக் காரணமான முன்னோடிகளில் ஒருவருமான, சீரிய பெரியார் கொள்கை செயல்பாட்டாளர், 96 வயதாகும் அய்யா ஆனைமுத்து அவர்களுக்கு வாழ்நாள் சமூக நீதி சாதனையாளர் விருது வழங்கியும், அவருடைய சீரிய பணியினை பாராட்டும் விதமாக ஒரு லட்சம் ரூபாய் நிதியும் அளிக்கப்பட்டது.

நிகழ்வில் தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினர் ஆச்சாரி தல்லொஜு, பெல் ராணிப் பேட்டை தொழிற்சாலையின் நிர்வாக இயக்குனர் மூர்த்தி ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். பேரமைப்பின் நிர்வாகிகளான கு.தனசேகர், சி.சேதுபதி , ஆர்.அப்சல், ஆர்.செந்தாமரைக்கண்ணன் பங்கேற்றனர்.

பெல் இராணிப்பேட்டை கலையரங்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திரளான பெல் தொழிலாளர்களும் சமூக நீதி ஆதரவாளர்களும் பங்கேற்றனர். முன்னதாக பெல் பிற்படுத்தப்பட்டோர் சங்கத்திற்கு வழங்கப்பட்ட புதிய அலுவலகத்தினையும் அய்யா ஆனைமுத்து திறந்து வைத்தார்.

# ‘தந்தை பெரியார் மளிகை அங்காடி’ திறப்பு

திருப்பூர் மாவட்டம் ஆத்துப் பாளையம் பகுதியில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர் மதனின் ‘தந்தை பெரியார் மளிகை அங்காடி’ திறப்பு விழா 18.02.2021, வியாழன் காலை 11.30 மணியளவில் நடை பெற்றது.

விழாவிற்கு திருப்பூர் மாவட்டக் கழகத் தலைவர் முகில்ராசு தலைமை தாங்கினார். முதல் நிகழ்வாக பகுத்தறிவுப் பாடல்களை து. சோ. பிரபாகர், பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை, அமுதினி ஆகியோர் பாடினர். கழகப் பொருளாளர் துரைசாமி அங்காடியை திறந்து வைத்து உரையாற்றினார். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் வார்டு கவுன்சிலர் செந்தில்குமார் விற்பனையை தொடங்கி வைத்தார். கழக அமைப்புச் செயலாளர் இரத்தின சாமி, தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, இயற்கை ஆர்வலர் பாண்டியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.




இந்நிகழ்வில், திவிக கோவை மாவட்டத் தலைவர் இராமச்சந்திரன், திருப்பூர் மாவட்ட அமைப்பாளர் அகிலன், சங்கீதா, திருப்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் ராமசாமி, மாநகரத் தலைவர் தனபால், திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை பிரகாஷ், கழகத் தோழர்கள் சரசு, சந்திரா, வீரலட்சுமி, தேன்மொழி, மணிகண்டன், ஹரீஷ் குமார், பிரசாந்த், ராஜசிங்கம், கதிர் முகிலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும் ஆத்துப்பாளையம் முன்னாள் வார்டு கவுன்சிலர் CPIM கீதாலட்சுமி, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் பகுதிப் பொறுப் பாளர் சந்தோஷ் இசைப்பிரியன், நண்பர்கள் ஜெகன், பிரபு, கிஷோர், கண்ணன், முத்து, வினோத், அஜித், ஜெகன் காயத்ரி, ஜோதி, சுபாஷினி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கழக ஏடுகளுக்கு சந்தா: கோபி இளங்கோவன் பாராட்டத் தக்க பணி

கொரோனா காலத்தைப் பயன்படுத்தி கழக வெளியீட்டு செயலாளர் கோபி இராம. இளங்கோவன் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’, ‘நிமிர்வோம்’ இதழ்களுக்கு தலா 108 சந்தாக்களை சேர்த்து முகவரிப் பட்டியலுடன் உரிய தொகை ரூ.54,000/-த்தை அனுப்பியுள்ளார். ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு மாவட்டம் தோறும் நன்கொடை வழங்க தலைமைக் குழுவில் முடிவெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து இதுவரை சேலம் (மேற்கு), சென்னை மாவட்டம் தலா ரூ.10,000/- வழங்கியுள்ளது.

# சென்னையில் ‘ஊபா’ எதிர்ப்பு கருத்தரங்கம்

“‘ஊபா’வை நீக்கிட என்.அய்.ஏ வை கலைத்திட குரலெழுப்புவோம்’ கருத்தரங்கம் சென்னை நிருபர்கள் சங்க கட்டிடத்தில் 20.02.2021 அன்று மதியம் 3 மணியளவில் நடைபெற்றது.

திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் கலந்து கொண்டு, “பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டு வந்த சட்டங்களே பிரிட்டிஷ் அரசாங்கமே கலைத்துவிட்டது. அதன் மாற்றே இந்த ஊபா சட்டம். அது தேச விரோதி களுக்கு எதிராக பயன்படுத்துவதாக பாஜக அரசு கூறி வருகிறது, மக்களுக்காக சிந்திப்பவர்கள் தான் தேச விரோதி களென்றால், நாம் தேச விரோதிகளா கவே இருப்போம்” என்று கருத்துரை யாற்றினார். கருத்தரங்கில் கழக மாவட்டச் செயலாளர் உமாபதி, மயிலை இராவணன் மற்றும் சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# மார்ச் 8 – கழகக் குடும்ப சந்திப்பு: ஈரோடு வடக்கு மாவட்ட கலந்துரையாடலில் முடிவு



ஈரோடு வடக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக்கழகத்தின் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 7.02.2021 அன்று ஞாயிறு மாலை 4 மணியளவில் கோபி நாகப்பன் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் நாத்திக சோதி, மாவட்ட செயலாளர் வேணுகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் விவசாயிகள் பாதிக்கும் மூன்று வேளாண் சட்டங்களை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் எனவும், போராடும் விவசாயிகள் மீது போடப்பட்ட வழக்குகளை ரத்து செய்ய வேண்டியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு உள்ள பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு தமிழர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டியும், வீரப்பன் வழக்கில் பெரும் சிக்கலுக்கு ஆளாகி சிறையில் வாடுபவர்களையும் தமிழக அரசு உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. வருகின்ற மார்ச் 8 உலக மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாவட்டக் கழகத் தோழர்களின் குடும்ப சந்திப்பு நிகழ்ச்சி நடத்துவது எனவும் முடிவ செய்யப்பட்டது. இறுதியில் அலிங்கியம் செந்தில் நன்றி கூறினார். கூட்டத்தில் மாவட்ட கழகத் தோழர்கள் பெரும்பாலானோர் கலந்து கொண்டனர்.

# துடிப்பு மிக்க இளைஞரை கழகம் இழந்து விட்டதே; கோவை அறிவரசு மாரடைப்பால் முடிவெய்தினார்

திராவிடர் விடுதலைக் கழக கோவை மாவட்டத் தோழர் கார்த்தி என்கிற அறிவரசு (36) கடந்த 21.02.2021 அன்று அதிகாலை 3:30 மணியளவில் மாரடைப்பு காரணமாக முடிவெய்தினார்.



துடியலூரில் உள்ள அண்ணா குடியிருப்பில் அவரது இல்லத்தில் இறுதி மரியாதைக்காக உடல் வைக்கப்பட்டது.

தோழர் அறிவரசு கொள்கைப்படியே இறுதி நிகழ்வு எந்தவித, ஜாதி, மத சடங்குகள் இல்லாமல் கருப்புத் துணியும், கழகக் கொடியும் போர்த்தி, கழகப் பெண் தோழர்கள் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த திருநங்கை மெஹந்தி ஆகியோர் அவரது உடலை தூக்கினர். துடியலூர் மின் மயானத்தில் அறிவரசு உடல் மாலை 5:30 மணியளவில் எரியூட்டப்பட்டது. இல்லத்தில் இருந்து மின் மயானம் வரை கழகத் தோழர்களும், அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் முழக்கங்களை எழுப்பிக் கொண்டே வந்தனர்.

கடந்த 09.02.2020 அன்று கோவையில் நடைபெற்ற நீலச்சட்டை பேரணியில் குடும்பத்துடன் தன்னை கழகத்தில் அறிவரசு இணைத்துக்கொண்டார். மேட்டுப்பாளையத்தில் நடந்த பெரியாரியல் பயிலரங்கில் குடும்பத்துடன் பங்கேற்றார்.

பெரியாரியலை தேர்வு செய்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் செயல்பாடுகளை உன்னிப்பாக கவனித்து இந்த அமைப்பில் சேரும் முடிவை தேர்வு செய்து ஆர்வத்துடன் பணியாற்ற வந்த ஒரு இளைஞர், ‘திடீரென’ இப்படி ஒரு மரணத்தை சந்தித்து விட்டார். இலட்சியத் துடிப்புள்ள ஒருஇளைஞரின் இழப்பு ஈடு செய்ய முடியாத சமூகத்துக்கான இழப்பு. திடீர் பிரிவால் கடும் துயரத்தில் மூழ்கி இருக்கும் அவரது குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறோம்.

கோவை மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் சிவகாமி, கோவை மாவட்ட செயலாளர் வெள்ளியங்கிரி, கோவை மாநகர செயலாளர் நிர்மல், திருப்பூர் மாவட்டத் தலைவர் முகில்ராசு ஆகியோர் உட்பட திருப்பூர், கோவை மாவட்டக் கழகம் மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்களும் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 25th February 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN